திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், வேளூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்.
முன்னிலை: திருமதி.கலாராணி ரவிச்சந்திரன்.

ந.க.எண்.001/2024 நாள்: 08.03.2024

பொருள்: மனைப்பிரிவு ஒப்புதல்–திருத்துறைப்பூண்டி வட்டாரம்–வேளூர் ஊராட்சி–மற்றும் கிராம நில அளவை எண்.65/2, 65/3A, 65/5, 65/11, 65/12, 65/13, 65/14 A, 66/1B, 66/2B,66/3, 67/6B, 67/8, 67/9, 67/10, 69/2, 69/3, 69/4, மற்றும் 69/6–ல் 28987.00 ச.மீ.பரப்பளவில் அமைந்துள்ள மனைப்பிரிவை நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவாரூர் அவர்கள் ஒப்புதல் அளித்த வரைபடத்தில் 1 முதல் 130 மனைகளுக்கு இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடல் –தொடர்பாக.

பார்வை:
1) திரு.ரகு த/பெ. வெங்கட்ராமன், தெற்குத்தெரு, வேளூர் அஞ்சல், திருத்துறைப்பூண்டி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம் அவர்களின் கடிதம் நாள் 28.02.2024.
2) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திருத்துறைப்பூண்டி அவர்களின் ந.க.எண்.0811/2024/ஆ3 நாள் 29.02.2024.
3) இணைஇயக்குநர் /உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் கடிதம் ந.க.எண்.17138/2023/TVR நாள் 03.01.2024.
4) தானப்பத்திர ஆவண எண்.3351/2023, நாள் 28.12.2023.
5) அரசாணை (நிலை) எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(3)த் துறை நாள் 04.05.2017.
6) இணை இயக்குநர்/உ தவி இயக்குநர் (கூ.பொ.) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் கடிதம் ந.க.எண்.127/2022/ TVR நாள் 08.03.2022.
7) மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் ஒப்புதல் இணையதள விண்ணப்ப எண்.71Z02U7G (17138/ 2023)TVR நாள் 28.12.2023.
8) மற்றும் இதர தொடர்புடைய ஆவணங்கள்.

****

உத்தரவு:

திருத்துறைப்பூண்டி வட்டாரம், வேளூர் ஊராட்சி மற்றும் கிராம நிலஅளவை எண்.65/2, 65/3A, 65/5, 65/11, 65/12, 65/13, 65/14 A, 66/1B, 66/2B,66/3, 67/6B, 67/8, 67/9, 67/10, 69/2, 69/3, 69/4, மற்றும் 69/6–ல் 28987.00 பரப்பளவில் அமைந்துள்ள "சுமார்ட் சிட்டி" மனைப்பிரிவு, நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் திருவாரூர் அவர்களின் செயல் ஆணையில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவில் 1 முதல் 130 வரையுள்ள மனைகளுக்கு உரிய கட்டணம் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

Scanned by CamScanner

1) கூராய்வு கட்டணமாக ஒரு மனைக்கு ரூ.1000/–(ரூபாய் ஆயிரம் மட்டும்)வீதம் 130மனைகளுக்கும் ரூ.1,30,000/–(ரூபாய் ஒரு லட்சத்து முப்பதாயிரம் ம் மட்டும்) வேளூர் ஊராட்சி மனை பிரிவுகளுக்கான திருத்துறைப்பூண்டி கிளை இந்தியன் வங்கி கணக்கு எண்.7665845534–ல் 05.03.2024ல் செலுத்தப் பட்டுள்ளது.

2) வழிகாட்டு மதிப்பு சந்தை மதிப்பில் 3சதவீதம் வீதம் கட்டணம் ரூ.91,000/– (ரூபாய் தொண்ணூற்று ஓராயிரம் மட்டும்) ஆன்லைன் (இ.செல்லான்) மூலம் உரிய வங்கி கணக்கில் 06.03.2024 ல் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட 1 முதல் 130 மனைகளுக்கு உரிய கட்டணம் செலுத்தியுள்ளதாலும், சாலைகள், பூங்காக்கள், தெருவிளக்கு அமைப்பதற்கு உரிய இடம் ஊராட்சிக்கு தானப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாலும், மேற்கண்ட மனைகளை ஊராட்சிமன்ற தீர்மான எண்.29ல் ஒப்புதல் வழங்கியுள்ளதாலும் (தீர்மான எண்.29, நாள் 08.03.2024) இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடப்படுகிறது.

(பார்வை 7–ல் குறிப்பிட்டுள்ள மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவாரூர் அவர்களின் செயலாணையின் நிபந்தனைகளும் இதற்கு பொருந்தும்)

ஊராட்சி மன்ற அலுவலகம் 08.03.24 வேளூர் ஊராட்சி

தலைவர்,
ஊராட்சிமன்றம்,
வேளூர்.

தலைவர்,
ஊராட்சி மன்றம்
வேளூர்

பெறுதல்:
திரு.ரகு,
த/பெ.வெங்கட்ராமன்,
2/137–தெற்குத்தெரு,
வேளூர் –அஞ்சல்,
திருத்துறைப்பூண்டி– தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம். 614 715.

Scanned by CamScanner